முருகப்பெருமான் துணை

**மகான் சங்கரமகரிஷி அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.11.2022, வெள்ளிக்கிழமை

1. வேலவா ஞானத் தலைவா
வெற்றிதனை அருளும் முருகா
காலனை விரட்டி அழியாமை
கடைத்தேற்றமருள அரங்கமகா
2. மகா ஞானியாக அவதாரம்
மண்ணுலகில் நிகழ்த்தி அருளும்
குகனே குருபரனே உமை போற்றி
கூறிடுவேன் சங்கரமகரிஷி யானும்
3. யானும் சுபகிருது துலை திங்கள்
உயர்வான மூவாறுதிகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 18 ம் நாள் 04.11.2022, வெள்ளிக்கிழமை)
அனுகூல ஆசிதனை உரைப்பேன்
ஆறுமுகக் கடவுளின் அருளே
4. அருளே மாயைத் துன்பத்துள்
அகப்படா மீட்டுக் காக்கும்
அருளே நல்வழிதனை உணர்த்தி
ஆன்மீக மெய்ஞானவானாக
5. ஆகவே வழிவகை செய்யும்
அறம் செய்ய மனபலம் தரும்
வகையான காரண காரிய
வல்லமைதரும் சற்குருவை தேடி
6. தேடி அடைய தெளிவு பெற
தேக்கமின்றி ஆற்றல் தரும்
அடிபணிந்து ஞானிகள் பேரில்
அனுதினம் பூசை செய்யவும்
7. செய்யவும் பெருந்துணை வரும்
செயற்கரிய சேவை ஆற்றவும்
அய்யமின்றி உலகில் வாழவும்
ஆபத்து அனுகா பாதுகாப்புத் தரும்
8. தருகவே முருகா அரங்கா
தவசியே ஞானியே என
ஒருமுறையேனும் நித்தம் சொல்லி
உலகோர் பழக்கம் கண்டுவிட
9. கண்டுவிட செய்வினை அல்லல்
கட்டுக்கள் அனைத்தும் அகலும்
தொண்டுவழி இயங்கும் வண்ணம்
திடமும் செயலும் சிறந்து

10. சிறந்துமே பிறவிப் பயனை
சித்தம் அறிந்து தெளிந்து
அருந்தவசி ஆறுமுக அரங்கன்
அனுகூலமாக அடைந்து நன்கு

11. அடைந்து நன்கு உயர நேரும்
அரங்கமகான் வழி தன்னில்
தடையற வேலவன் காட்சி கண்டு
தரணியோரெல்லாம் ஞானியாகக் கூடும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—